வீழ்ந்துவிடா வீரம்! மண்டியிடா மானம்!

**நாம் தமிழர் கட்சி**

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்






# தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு

## ஆண்டு மலர்

## 2019





தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு

நாம் தமிழர் கட்சி

www.naamtamilar.org

# உள்ளே...

*வணக்கம் உறவுகளே! நம் தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு, சிறப்பான முதலாம் ஆண்டை நிறைவு செய்துள்ளது. தேர்தல் பணி, சமூகப்பணி எனப் பல தளங்களில் களமாடிய சிறப்பான ஆண்டாக அமைந்தது. இன்னும் செல்ல வேண்டிய தூரம் அதிகம். உறுதியுடன் பயணிப்போம். வாழ்த்துகள்!*

*- ஆசிரியர் குழு*



தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு துவக்க விழா



பாராளுமன்றத் தேர்தல் பரப்புரை



வேலூர் பாராளுமன்றத் தொகுதி தேர்தல் பரப்புரை



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி தேர்தல் பரப்புரை



உலக மனித உரிமைகள் நாள் விழிப்புணர்வு கருத்தரங்கம்



வடகாடு தேர்தல் பரப்புரை (ஊரக உள்ளாட்சி தேர்தல்)



ஒடிசா சகோதரர்களுக்கு உதவிக்கரம்! (பானி புயல்)



பேரரசன் பெருவிழா (இராசராச சோழன் பெருவிழா) நிதிப்பங்களிப்பு

தகவல் தொழில் நுட்பப் பணியாளர்கள் பாசறை வெளியிட்ட அறிக்கைகள்




ஊடகங்களில் தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு

# தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு துவக்க விழா
















நாம் தமிழர் கட்சியின் தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு சார்பாக நிகழ்த்தப்பட்ட தேர்தல் பரப்புரை திட்டங்கள்

- பாஜக, காங்கிரசுக்கு ஏன் வாக்களிக்கக் கூடாது என்பதற்கான 100 காரணங்கள் புள்ளி விவரங்களுடன் தமிழிலும், ஆங்கிலத்திலும் தொகுத்து வெளியிடப்பட்டு பரப்பப்பட்டது.
- இப்பிரிவின் சார்பில் பல மொழிகளிலான அத்தகைய துண்டறிக்கைகள் சுமார் 11,000 என்றளவில் அச்சிடப்பட்டு சென்னையில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், மற்றும் அதன் பணியாளர்கள் அதிகம் கூடும் இடங்களில் விநியோகிக்கப்பட்டது.



# எங்கள் கட்சி அனைத்து மக்களுக்குமானது!
# எங்கள் அரசியல் அனைத்து உயிர்களுக்குமானது!!

தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு

**நாம் தமிழர் கட்சி**

## நாம் தமிழர் செயற்பாட்டு வரைவின் முக்கிய அம்சங்கள்

1. தரமான மருத்துவம் அனைவருக்கும் இலவசம்.
2.அனைவருக்கும் பொதுவான தரமான கட்டணமில்லா கல்வி.
3. தூய சுத்திகரிக்கப்பட்ட வேதிபொருள் கலக்காத இலவச குடிநீர் அனைவருக்கும் ஒரே மாதிரியாக வழங்கப்படும்.
4. அணு உலைகள் முற்றாக மூடப்படும். காற்றாலை, சூரிய ஒளி, நீர் மின் உற்பத்தி பெருமளவில் அதிகரிக்கப்படும்.
5. இயற்கை விவசாயத்திற்கு மட்டுமே அனுமதி.
6. பெண்வதைக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படும்.
7. அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கு 50% ஒதுக்கீடு.
8. பூரண மதுவிலக்கு அமல்.
9. கல்வி மற்றும் விவசாயக்கடன் தள்ளுபடி.
10. தரமான சாலைகள் மற்றும் உள்கட்டமைப்புகள்.
11. நெடுஞ்சாலைகளில் ஒவ்வொரு 100 கிலோமீட்டருக்கும் அவசர ஊர்தி.
12. ஆட்சியாளர்கள், அரசு அதிகாரிகள் கட்டாயம் அரசு மருத்துவமனைகளிலேயே சிகிச்சை பெற வேண்டும்.
13. நிலம் மற்றும் மக்களுக்கு தீங்கு விளைவிக்காமல் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த தொழில்நுட்பம் முழுமையாக பயன்படுத்தப்படும்.
14. இயற்கை பேரழிவுகளின்போது விவசாயிகளுக்கு வழங்கும் நிவாரண நிதிகள் அதிகரிக்கப்படும்.
15. ஆட்சியாளர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் அரசு பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் குழந்தைகளை கட்டாயம் அரசு பள்ளிகளிலேயே படிக்க வைக்க வேண்டும்.
16. 10 லட்சம் நீர் நிலைகள் உடனடியாக அமைக்கப்படும்.
17. ஆடுமாடு மேய்த்தல் மற்றும் விவசாயம் அரசு பணி.
18. 1 கோடி பனைமரங்கள் முதற்கட்டமாக நடப்பட்டு பாதுகாக்கப்படும்.
19. சாலைகளின் இரு பக்கங்களிலும் இயற்கையை பாதுகாக்கும் மரங்கள் நடப்படும்.
20. புதியதாக காடுகள் வளர்க்கப்படும்.
21. விவசாயம் சார்ந்த மரபு வழி தொழில்களுக்கு மட்டுமே அனுமதி.
22. எல்லா அடிப்படை வசதிகளும் அனைத்து கிராமங்களுக்கும் அளிக்கப்படும்.
23. விவசாய நிலங்கள் அனைத்தும் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்து அரசின் மேற்பார்வையில் இருக்கும்.
24. சிற்றூர்களின் பொருளாதார வளர்ச்சி மீட்டெடுக்கப்படும்.
25. கோக், பெப்சி போன்றவை கடைகளில் வைத்து விற்க தடை.
26. இளநீர், பதனி தேசிய பானமாக அறிவிக்கப்படும்.
27. கழிவுநீர் சுத்திகரிக்க மற்றும் கையால் மலம் அள்ளும் அவலநிலையை ஒழிக்க இயந்திரங்கள் நிறுவப்படும்.
28. மீன்பிடித்தொழில் பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் மீனவர் பாதுகாப்பு படை (நெய்தல் படை) அமைத்தல்.
29. கனிமவளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுக்காக்கப்படும்.
30. கையூட்டு வாங்கினால் உடனடியாக பணிநீக்கம் செய்யப்பட்டு சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும்.
31. பெண் காவலர்களுக்கான பணிநேரம் 6 ஆக குறைக்கப்படும்.
32. நெகிழி முற்றிலுமாக ஒழிக்கப்படும்.
33. வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் தகவல் தொழில்நுட்பத் தொழில்துறையின் தொழில்கள் மாநிலத்தில் பரவலாக பரப்பப்படும்.
34. தொழில் தொடங்க உங்களிடம் பணம் இல்லை என்றால் அரசே முதலீடு செய்து தன்னையும் உங்களுடன் பங்குதாரராக இணைத்துக்கொள்ளும்.
35. ஒரு பரந்துபட்ட தற்சார்பு பசுமை தாய்மை உற்பத்தி பொருளாதாரக் கொள்கைகள் உருவாக்கப்படும்.

**மத்திய கூட்டாட்சி! மாநில சுயாட்சி!!**

நாம் தமிழர் கட்சியில் இணைய:
www.join.naamtamilar.org

நாம் தமிழர் ஆட்சியின் செயற்பாட்டு வரைவு:
www.makkalarasu.in

தகவல் தொழில்நுட்ப பணியாளர்கள் பிரிவில் இணைய:
www.itew.naamtamilar.org

» நாம் தமிழரின் 'பெண்ணியம் போற்றுவோம்' என்ற திரையரங்க விளம்பரம் தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு சார்பாக தயாரிக்கப்பட்டு, தலைமைத் தேர்தல் ஆணையத்தின் அனுமதியுடன் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள திரையரங்குகளில் வெளியிடப்பட்டது.







# வேலூர் பாராளுமன்றத் தொகுதி தேர்தல் பரப்புரை

- இந்திய பாராளுமன்ற தேர்தலின் போது நிறுத்தம் செய்யப்பட்ட வேலூர் தொகுதியின் பாராளுமன்றத் தேர்தல் ஆகத்து மாதம் நடைபெற்றது.

- இதில் நாம் தமிழர் கட்சி சார்பாக வேட்பாளராக போட்டியிட்ட தீபலட்சுமி அவர்களை ஆதரித்து இரண்டு நாள் பரப்புரை பயணம் நமது பாசறை சார்பாக முன்னெடுக்கப்பட்டது.

- இதில் விருப்பமுள்ள நமது பாசறை உறவுகள் பரப்புரையில் பங்கேற்றும், நிதியுதவியும் அளித்தனர்.

- மேலும் சேகரிக்கப்பட்ட நிதியானது(ரூ.35,000) நமது பிரிவின் சார்பாக வேட்பாளர் தீபலட்சுமி அவர்களிடம் கொடுக்கப்பட்டது.


THE TIMES OF INDIA

THIS STORY IS FROM AUGUST 4, 2019

## Techies from Chennai, Bengaluru make a mark at election campaign in Vellore

M K Ananth | TNN | Aug 4, 2019, 11:32 IST

MADURAI: Over the last few weeks IT professionals from Chennai and Bengaluru have been actively campaigning for their party candidates for the Vellore Lok Sabha polls. Some have taken leave for a day or two whereas most of them are campaigning during the weekends.









# விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி தேர்தல் பரப்புரை



- விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு அக்டோபர் மாதம் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது.

- இதில் நாம் தமிழர் கட்சியின் சார்பாக சமூக ஆர்வலர் கு.கந்தசாமி அவர்கள் போட்டியிட்டார்.

- அவரை ஆதரித்து பரப்புரை செய்ய நமது பிரிவின் சார்பாக இரண்டு நாள் பரப்புரை பயணம் முன்னெடுக்கப்பட்டது.










# உலக மனித உரிமைகள் நாள் விழிப்புணர்வு கருத்தரங்கம்



- உலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நமது பாசறையின் சார்பாக விழிப்புணர்வு கருத்தரங்கம் சென்னை இராவணன் குடிலில் நடைபெற்றது.
- இந்திய அரசியலமைப்பு சட்டத்தை பற்றியும், சமகால மனித உரிமைகள் பற்றியும் வழக்கறிஞர் ராஜிவ்காந்தி அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.
- தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றியும் மற்றும் அதை பயன்படுத்தும் நடைமுறைகள் பற்றியும் வழக்கறிஞர் பாரிவேந்தன் அவர்கள் விளக்கினார்.
- கல்வி உரிமைச்சட்டம் மற்றும் தேசிய கல்விக்கொள்கை-2019 ன் குறைபாடுகளை பற்றி பேராசிரியர் கல்யாணசுந்தரம் அவர்கள் எடுத்துரைத்தார்.
- இந்த விழிப்புணர்வு கருத்தரங்கின் மூலம் 14 தீர்மானங்கள் முன்மொழியப்பட்டன.
- இந்த கருத்தரங்கில் பல உறவுகள் பங்கேற்று கருத்தரங்கின் தலைப்புகள் பற்றி தெரிந்துக் கொண்டனர். மேலும் தங்களது சந்தேகங்களை சிறப்பு விருந்தினர்களிடம் கேட்டு தகவல்களை பெற்றுக்கொண்டனர்.














# வடகாடு தேர்தல் பரப்புரை
# (ஊரக உள்ளாட்சி தேர்தல்)



- தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தால் ஊரக உள்ளாட்சி தேர்தல் தமிழகத்தில் புதிதாக பிரிக்கப்பட்ட 9 மாவட்டங்களை தவிர்த்தும், நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சிகளை தவிர்த்தும் டிசம்பர் மாதம் அறிவிக்கப்பட்டது.

- இந்த தேர்தலில் நமது பிரிவிலிருந்து வடகாடு ஊராட்சி தலைவர் பதவிக்கு ராஜாராம் அவர்களும் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் பதவிக்கு முரளிதரன் அவர்களும் போட்டியிட்டனர்.

- இவர்களை ஆதரித்து தேர்தல் பரப்புரை செய்ய இரண்டு நாள் பரப்புரை பயணம் நமது பிரிவின் சார்பாக முன்னெடுக்கப்பட்டது.

- அதில் நமது பிரிவின் உறுப்பினர்கள் பங்கேற்று வேட்பாளர்களுடன் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தனர்.








# ஒடிசா சகோதரர்களுக்கு உதவிக்கரம்! (பானி புயல்)

- பானி புயலால் வரலாறு காணாத வகையில் கடுமையாக பாதிக்கப்பட்ட ஒடிசா மாநில மக்களுக்கு உதவிடும் பொருட்டு அம்மாநிலத்தில் உள்ள பூரி மாவட்டத்தைச் சேர்ந்த கேளார் அருகிலுள்ள குமர்படா கிராம மக்களுக்கு நாம் தமிழர் கட்சியின் தகவல் தொழில் நுட்பப் பணியாளர்கள் பிரிவின் சார்பாக சூரிய விளக்கு, அரிசி, கோதுமை, பருப்பு, எண்ணெய், ரொட்டி, போர்வை உள்ளிட்ட பல்வேறு வகையான அத்தியாவசிய பொருட்கள் ஒரு குடும்பத்திற்கு ரூ.1000 என்ற வகையில் சுமார் 20 குடும்பங்களுக்கு நிவாரண உதவியாக வழங்கப்பட்டன.



# பேரரசன் பெருவிழா (இராசராச சோழன் பெருவிழா) நிதிப்பங்களிப்பு

- வீரத்தமிழர் முன்னணி சார்பில் தஞ்சையில் விரைவில் நடைபெறவுள்ள அருண்மொழி சோழன்(இராசராச சோழன்) பேரரசன் பெருவிழாவை மிகச்சிறப்பாக நடத்துவது குறித்த கலந்தாய்வு, அண்ணன் சீமானின் முன்னிலையில் அன்னை அருள் திருமண அரங்கம், கிழக்கு தாம்பரத்தில் நடைபெற்றது. இக்கலந்தாய்வில் நமது பிரிவு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.
- மேலும் நமது பிரிவு உறுப்பினர்களிடம் திரட்டப்பட்ட நிதி ரூ 25,000 /- நமது பிரிவின் சார்பில் வீரத்தமிழர் முன்னணி பொறுப்பாளர்களிடம் நன்கொடையாக ஒப்படைக்கப்பட்டது.



Reg. No: 56/48/2013

விழ்த்துவிடாத வீரம்! நாம் தமிழர் கட்சி மண்டியிடாத மானம்!

**தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு**

Naam Tamilar Katchi – Information Technology Employees Wing

## தகவல் தொழில்நுட்பப் பணியாளர் தங்கை நித்யா தற்கொலை - இரங்கல் செய்தி - நாம் தமிழர் கட்சி தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு

நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான நிறுவனங்களையும், பல லட்சக்கணக்கான பணியாளர்களையும் கொண்டு உலகத் தகவல் தொழில்நுட்ப வர்த்தகத்தில் முன்னணி வகிக்கும் இந்நாட்டில், அதிலும் குறிப்பாக இந்திய அளவில் மிக முக்கியப் பங்கு வகிக்கும் நம் தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்த நிறுவனங்களில் பணியாற்றும் லட்சக்கணக்கான ஊழியர்களுக்கான அதிகபட்ச பணி நேரம், அடிப்படை ஊதியம், நியாயமான பதவி உயர்வு, பணி நிரந்தரம் போன்ற அடிப்படை விடயங்களில் தொடர்ந்து வஞ்சிக்கும், இலாப நோக்கை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட இந்தத் தனியார் தகவல் தொழில்நுட்ப கூட்டுறவு

Reg. No: 56/48/2013

விழ்த்துவிடாத வீரம்! நாம் தமிழர் கட்சி மண்டியிடாத மானம்!

**தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு**

Naam Tamilar Katchi – Information Technology Employees Wing

## தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களில் நடைபெறும் ஆட்குறைப்பு நடவடிக்கை – தகவல் தொழில் நுட்பப் பணியாளர்கள் பாசறை கண்டனம்

இன்ஃபோசிஸ், காக்னிஸன்ட், எச்.சி.எல் உள்ளிட்ட இந்தியாவில் உள்ள பல முன்னணி தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் தங்களது இலாப நோக்கிற்காக சட்டத்திற்கு புறம்பான வகையில் தற்போது பணியில் உள்ள ஊழியர்களை விருப்ப ஓய்வு எனும் பெயரிலும், இன்னபிற வழிகளிலும் திடீரென கட்டாய பணி நீக்கம் செய்யும் முடிவை நாம் தமிழர் தொழிலாளர் நலச்சங்கத்தின் தகவல் தொழில் நுட்பப் பணியாளர்கள் பாசறை வன்மையாகக் கண்டிக்கிறது.

ஒரு புறம் அதிக எண்ணிக்கையில் புதிய ஊழியர்களை, குறைவான அல்லது ஆரம்ப கட்ட ஊதியத்திற்கு வேலைக்கு எடுத்துக்கொண்டே மறுபுறம் அனுபவமிக்க, இடைநிலை ஊழியர்களை திடீரென அவ்வப்போது இவ்வாறு பணி நீக்கம் செய்து செலவைக் குறைப்பதன் மூலம் தங்களது

**Oneindia Tamil**
@thatsTamil

By : Oneindia Video Tamil Team | Published : October 16, 2019, 12:20 | Duration : 02:06



## விக்கிரவாண்டியில் நாம் தமிழர் கட்சிக்கு ஆதரவாக ஐடி ஊழியர்கள் பிரச்சாரம்- வீடியோ

ஐடி ஊழியர்கள்தான்.. ஆனால், விக்கிரவாண்டி தெருக்களில் நாம் தமிழர் கட்சிக்கு ஆதரவாக வாக்குகளை திரட்டி வருகிறார்கள்!

THE TIMES OF INDIA

NEWS / TECHIES FROM CHENNAI, BENGALURU MAKE A MARK AT ELECTION CAMPAIGN IN VELLORE

## Techies from Chennai, Bengaluru make a mark at election campaign in Vellore

M K Ananth | TNN | Aug 4, 2019, 11:32 IST

A- A+




*The members of Naam Tamilar Katchi IT employees wing campaigning at Vellore*

MADURAI: Over the last few weeks IT professionals from Chennai and Bengaluru have been actively campaigning for their party candidates for the Vellore Lok Sabha polls. Some have taken leave for a day or two whereas most of them are campaigning during the weekends.

This was their first campaigning experience as they stepped out from their offices and took to the streets under the scorching sun. IT professionals had a different yet confident approach unlike full-time politicians as they were able to casually interact with the voters with confidence.










Reg. No: 56/48/2013

தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு

Naam Tamilar Katchi – Information Technology Employees Wing

நாள்:26-03-2019

**இந்திய பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தகவல் தொழில்நுட்பப் பணியாளருக்கு ஆதரவு கோருதல்**

இராவணன் குடில், 8, மருத்துவமனை சாலை, செந்தில் நகர், போரூர், சென்னை - 600116.
Raavanan Kudil, 8, Hospital Road, Senthil Nagar, Porur, Chennai - 600116
itew@naamtamilar.org | itew.naamtamilar.org | +91 75500 99438, 95000 95032









# மாத இதழ்கள்


























**தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு**

**நாம் தமிழர் கட்சி**

இராவணன் குடில்
கதவு எண். 8, மருத்துவமனை சாலை, செந்தில் நகர், போரூர், சென்னை - 600116.
itew@naamtamilar.org | www.naamtamilar.org | +91 89398 66242